செ.வெ.எண்:19/ஏப்ரல் நாள்:15.04.2016

இராமநாதபுரம் மாவட்டம்

**சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016**
**திருவாடானை மற்றும் பரமக்குடி**
**மண்டல தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு**

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (15.04.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016 திருவாடானை மற்றும் பரமக்குடி ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் இன்று (15.04.2016) பார்வையிட்டு, ஆய்வு செய்து தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு மண்டல அலுவலர்களும் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு (Booth Level Officer) பயிற்சி அளித்திட வேண்டும். அனைவரும் தவறாது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளான வாக்குச்சாவடி மையங்களை ஆய்வு செய்து அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வு தளம் ஆகிய வசதிகள் இருக்கின்றனவா என ஒவ்வொரு மண்டல அலுவலர்களும் ஆய்வு செய்திட வேண்டும். அதன்பின்பு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சீரோடும் சிறப்போடும் பணியாற்றிட அனைத்து மண்டலங்களைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றம் உதவி அலுவலர்கள் பணிபுரிந்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டார். திருவாடானை சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 30 மண்டல அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதன் பின்பு பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்றுவரும் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு தேர்தல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார். பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 28 மண்டல அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி வகுப்பில் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (பரமக்குடி), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை தொகுதி), உதவி ஆணையர் (கலால்) திரு.இராமலிங்கம், வட்டாட்சியர் திரு.சுகுமார் (திருவாடானை), உள்பட மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.